## 16

# சிலுவைக்குப் ''பின்னர்'' இயேசு மொழிந்தவை

Christ's Words AFTER the Cross

### *முகவுரை*

- கிறிஸ்து பிறப்பு — மத்தேயு & லூக்காவில் மட்டும்;
  கிறிஸ்து உயிர்ப்பு — நான்கு சுவிசேஷங்களிலும்.

  கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் ஏராளம்;
  ஈஸ்டர் வாழ்த்து அட்டைகள் அபூர்வம்!

  ☐ கிறிஸ்துமஸ் ஓர் அற்புதம்தான்; அதிலும் பெரியது ஈஸ்டர்!
  ☐ கிறிஸ்து இல்லாது கிறிஸ்துமஸ் கிடையாது;
  உயிர்த்தெழுதல் இல்லாது கிறிஸ்தவம் கிடையாது!
  ☐ மரணத்தில் அல்ல, உயிர்த்தெழுதலில்தான் அற்புதம்!
  ☐ மனிதரது வாழ்வு ஓர் இழவுடன் முடிகிறது;
  கிறிஸ்துவின் இகவாழ்வோ கொண்டாட்டத்துடன் முடிந்தது!
  ☐ நாம் விசுவாசிக்கும் கிறிஸ்து —
  உயிரோடிருந்து இறந்தவர் அல்ல;
  இறந்து எழுந்து உயிரோடிருக்கிறார்!
  ☐ பெத்லெகேமின் சத்திரம் அல்ல,
  கிறிஸ்துவின் காலிக் கல்லறையே கிறிஸ்தவத்தின் தொட்டில்!
  ☐ கிறிஸ்தவம் பிரதானமாக உயிர்த்தெழுதலின் மார்க்கம்!

- சிலுவையிலிருந்து இயேசு மொழிந்தவற்றில் பிரசங்கங்கள் ஏராளம்;
  சிலுவைக்குப் பின்னர் அவர் மொழிந்தவை அதிகக் கவனம் பெறுவதில்லை.

- உயிர்த்தெழுந்தபின் கிறிஸ்து மொழிந்த 7 வாசகங்கள் கிறிஸ்தவ வாழ்வை வெற்றிநிறை வாழ்வாய் விளக்குகின்றன —

  எ.கா.) ☐ திருச்சபைகளுக்கு எழுதிய கடிதங்களில் அவர் தம்மை அறிமுகப்படுத்திய விதம் — வெளி 1:17,18 . . .
  *''மரித்தேன் ... உயிரோடிருக்கிறேன்''*
  ☐ கடிதங்களின் முடிவில் அவர் சொன்னது — 3:21 —
  *''ஜெயங்கொண்டேன்''*

  இதைத்தான் வெற்றிப் பவனி என்கிறோம் (2 கொரி 2:14-16)



### *வெற்றி வாழ்வு என்பது எது?*

### *1. அது தெய்வீக உறவின் வாழ்வு.*

யோ 20:17 ... *என் பிதா ... உங்கள் பிதா ...*
*என் தேவன் ... உங்கள் தேவன் ...*

தேவனது தந்தைத்துவத்தை நமக்குப் போதிக்க இயேசு வந்தார் —
எ.கா.) மலைப் பிரசங்கம் —

*''பரலோகிலிருக்கும் **உங்கள்** பிதா''*

| | | |
|---|---|---|
| மத் 5:16 | 6:6 | 6:18 |
| :45 | :8 | :26 |
| :48 | :9 | :32 |
| 6:1 | :14 | 7:11 |

- கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் இதுவே (யோ 1:12) —
  பிசாசு ஒரு பிதா vs. தேவன் பிதாவானவர் (யோ 8:42,44)
- இதுதான் பழைய, புதிய உடன்படிக்கைகளுக்கிடையேயுள்ள வேறுபாடு.
  பழைய உடன்படிக்கையில் தேவனைப் ''பிதாவே'' என்று யாரும் அழைக்கவில்லை — எனவேதான், *''ஜெபம்பண்ண எங்களுக்குக் கற்றுத்தாரும்''* (லூக் 11:1,2)

  சொல்லுங்கள்: ''தேவனே என் அப்பா!'' ''என் அப்பாவே தேவன்!''

என்னே சிலாக்கியம்!
பிறரோடு அடையாளப்படுத்த மக்களது தயக்கம்;
இயேசுவோ (எபி 2:11,12)
*''திரும்பவும் பயப்படாது ... அப்பா, பிதாவே ...''* (ரோ 8:15,16)

### *2. அது விளங்க முடியாத சமாதான வாழ்வு.*

உயிர்த்தெழுந்த கிறிஸ்து சொன்னது: *''சமாதானம்!''*
லூக் 24:36 ... எம்மாவூர் சீடர் + 11
யோ 20:19 ... மகதலேனா மரியாள் + 11
:26 ... தோமா + 10

- *''எனது'' சமாதானம்*
  யோ 14:27 ... *என் சமாதானத்தை விட்டுச் செல்கிறேன்*
  16:33 ... *என்னில் உங்களுக்குச் சமாதானம் ... திடன்கொள்ளுங்கள்*

- (பிறப்பில்) *''சமாதானப் **பிரபு**''* (ஏசா 9:6)
- (உயிர்த்தெழுதல், பரமேறுதலில்) *''சமாதான **ராஜா**''* (சாலேம்)
  மெல்கிசேதேக்கின் முறைமைப்படி (எபி 7:2)
  *''அழியாத ஜீவனுக்குரிய வல்லமை''* (வச 15-17)

= ஆழ்ந்த அமைதி, நிம்மதி —
*கவலை ... ஜெபம் ... எல்லாப் புத்திக்கும் மேலான*
*தேவ சமாதானம் ... சமாதானத்தின் தேவன்* (பிலி 4:6,7,9)

புயலிலும் அமைதி! (Calm in storm!)
*''உலகில் ... உபத்திரவம் ... திடன் ... ஜெயித்தேன்''* (யோ 16:33)

- சமாதானம் இல்லையேல் எது இருந்து எதற்கு?
  — உண்மையான *''பலம்''* (ஏசா 30:15-18)
  (குதிரைகள், வாகனங்கள்)
- புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்களது வாழ்த்துக்கள் —
  *''கிருபையும் சமாதானமும்''*
  கிருபையின் வெளிப்பாடே சமாதானம்!

  சமாதானமில்லாத எண்ணற்ற குடும்பங்கள்:
  *''சமாதானம் கூறுங்கள்!''* (லூக் 10:5)

### *3. அது அசைக்கமுடியாத விசுவாச வாழ்வு.*

- தோமாவிடம் இயேசு கூறியது —
  யோ 20:27-29 ... *பார்க்காது ... விசுவாசிப்போர் ...*
  தோமா = திதிமு = இரட்டை
  இரட்டை மனம் நம்மெல்லாருக்கும் சகஜம்.
- உயிர்த்தெழுதல் ... விசுவாசத்திற்கு அடித்தளம் (1 கொரி 15:17)
- எளிய விசுவாசம் மகிமையானது —
  1 பேது 1:8,9 ... *மகிமையால் நிறைந்தது*
- *விசுவாசத்தினால் நீதிமான் **பிழைப்பான்*** (= உயிர் வாழ்வான்)!
  தீர்க்கன் ஆபகூக்கின் பழைய ஏற்பாட்டு முன்னறிவிப்பு (ஆப 2:4)

  இதுதான் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவம் —
  ரோ 1:17 / கலா 3:11 / எபி 10:38



*''நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்''*
2 கொரி 5:5
''நடப்பது'' — பயம் (Fear)
''நடக்கப்பண்ணுபவர்'' — விசுவாசம் (Faith)

- *இந்த விசுவாசம் பொன், வெள்ளியிலும் விலையுயர்ந்தது!*
  (1 பேது 1:7)
  இதைச் சாதாரணமாய் எடுத்துக்கொள்கிறோம்;
  எல்லாருக்கும் இது இல்லையே!
- கிறிஸ்தவர்களுக்குப் பெயரே **''விசுவாசிகள்''** என்பதுதான்.
  அகரம் முதல் னகரம் வரை விசுவாசத்தாலேயே —
  *விசுவாச வார்த்தை* (ரோ 10:8)
  *விசுவாசத்தினால் இரட்சிப்பு* (எபே 2:8)
  *விசுவாசப் போராட்டம்* (1 தீமோ 6:12)
  *விசுவாசத்தின் ஆவி* (2 கொரி 4:13)

  எனவேதான், *விசுவாசத்தைத் துவக்குகிறவரும்*
  *முடிக்கிறவருமானவர்* (எபி 12:1)

  விசுவாசமே வெல்லும்!
  1 யோ 5:4,5 ... *விசுவாசமே உலகை ஜெயிக்கும்.*
- கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மீதுள்ள நமது விசுவாசம்
  நமது உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கையைத் தரும்!

  1999இல் இரத்தசாட்சிகளாய்த் தீக்கிரையாக்கப்பட்ட தனது
  கணவர் மற்றும் இரு மகன்களின் அடக்க ஆராதனையில்
  திருமதி கிளாடிஸ் அம்மையார் பாடச் சொன்ன பாடல் —
  *"Because He lives . . . I can face tomorrow"*
  (அவர் ஜீவிப்பதால் நாளையைத் தைரியமாய் எதிர்கொள்வேன்!)

### *4. அது வேத வாக்கியங்களோடுள்ள வாழ்வு.*

லூக் 24:25-27 ... எம்மாவூர் சாலையில் சீடர்
:44 ... *பஞ்சாகமம், சங்கீதங்கள், தீர்க்கதரிசிகள்*

- தமது நாமத்தைவிடத் தமது வார்த்தையைத்
  தேவன் மகிமைப்படுத்தியுள்ளார் (சங் 138:2ஆ)
- *''வேத வாக்கியங்களின்படி''* என்ற சொற்றொடர் பாடுகளின்
  வாரத்தில் அடிக்கடி சொல்லப்பட்டது —

எ.கா.) — *இதோ, உன் இராஜா வருகிறார்* (மத் 21:4,5)
— *என் வீடு ஜெப வீடு* (மத் 21:13)
— *குழந்தைகள், பாலகர் வாயினால் துதி* (மத் 21:16)
— *ஆகாதென்று தள்ளப்பட்ட கல்* (மத் 21:42)
— *அக்கிரமக்காரரோடு சிலுவையில்* (மாற் 15:27,28)
— *அவரது வஸ்திரத்தைப் பங்கிட்டார்கள்* (மத் 27:35)
— *தாகமாயிருக்கிறேன்* (யோ 19:28)
— *எலும்பு ஒன்றும் முறிக்கப்படுவதில்லை* (யோ 19:36)
— சுவிசேஷத்தின் வரையறை (1 கொரி 15:1-4)

- *வேத வாக்கியங்கள் ''எல்லாவற்றிலும்''* (லூக் 24:27).
  *வேத வாக்கியங்கள் ''எல்லாம்'' பிரயோஜனம்* (2 தீமோ 3:16,17).
  அங்குமிங்கும் சில பகுதிகளை மட்டும் எடுக்காதீர்.

- ஆன்மீகப் போராட்டத்தில் ''தாக்குவதற்கு'' ஒரே ஆயுதம் —
  ஆவியின் பட்டயம்: தேவ வசனம் (எபே 6:17)

  *''எழுதியிருக்கிறதே''* (மத் 4:1-10)
  — வசனங்களை மனனம் செய்யுங்கள்.
  அப்பொழுதுதான் ஆவியானவர் *''நினைவுபடுத்த''*
  முடியும் (யோ 14:26)

## *5. அது தைரிய சாட்சியின் வாழ்வு.*

- சுவிசேஷப் பேராணை நான்கு சுவிசேஷங்களிலும் —

  மத் 28:18-20 ... *சகல அதிகாரம் ... புறப்பட்டுப் போங்கள்*
  மாற் 16:16-18 ... *போய் ... அடையாளங்கள்*
  லூக் 24:47-49 ... *மனந்திரும்புதல் ... பாவ மன்னிப்பு ...*
  யோ 20:21 ... *பிதா என்னை அனுப்பியதுபோல் உங்களை ...*
  :22,23 ... *ஊதினார் ... பரிசுத்த ஆவி ... மன்னியுங்கள்*

- இயேசுவின் பிரிவு வார்த்தைகள் —
  அப் 1:8 ... *வல்லமை ... சாட்சிகள் ... உலகு*

- பேதுரு, யோவான் போன்ற கோழைகளுக்குத் தைரியம்
  கொடுத்தது இயேசுவின் உயிர்த்தெழுதலே (அப் 4:33)



- உலகில் மதங்கள் ஏராளம்; சுவிசேஷமோ ஒன்றே!
  பல அவதாரங்கள் உண்டு; இரட்சகரோ ஒருவரே!
  எல்லாமே அவரது உயிர்த்தெழுதலினாலேயே!

  எனவேதான் பவுல் சொன்னது (1 கொரி 15:14) —
  *''கிறிஸ்து எழுந்திராவிடில் எங்கள் பிரசங்கம் வீண் ...*
  *உங்கள் விசுவாசம் வீண் ... இன்னும் பாவத்தில் ...''*

  உயிர்த்தெழுதலின்றிச் சுவிசேஷம் முழுமை பெறாது —
  1 கொரி 15:1-5

- உயிர்த்தெழுதலையும், நியாயத்தீர்ப்பையும் பற்றிப் பவுல் பேசிய
  வுடன் தேசாதிபதி பேலிக்ஸ் பீதியடைந்தான் (அப் 24:15,25)

## *6. அது இணையற்ற அன்பின் வாழ்வு.*

தணிந்து போகாத அன்பு.
யோ 21:15-17 ... *என்னை நேசிக்கிறாயா?*

- தேவன் மீதுள்ள அன்புதான் நமது திருப்பணிக்கு ஆதாரம் —
  *''ஆட்டுக்குட்டிகளை ... ஆடுகளை ... மேய்ப்பாயாக''*

  வேறெதுவும் அதிகக் காலம் தாக்குப்பிடிக்காது —
  தேவனது கட்டளைகள்/ஆணைகளுக்குக் கீழ்ப்படிதல் என்பது
  அன்பினால் பிறக்கவேண்டும் —
  *''அவரில் அன்பாயிருந்தால் அவருக்குக் கீழ்ப்படிவோம்''*
  ( 1 யோ 5:2,3)

  இதுதான் **அடிமைக்கும் குமாரனுக்கும் உள்ள வேறுபாடு!**

  வேறெதையும்விட அவரை நேசிக்கக் கற்கவேண்டும் —
  *''இவையெல்லாவற்றையும்விட என்னை நேசிக்கிறாயா?''*

இது எங்ஙனம்?

அ) *''அவர் முதலாவது நேசித்ததால் நேசிக்கிறோம்''* (1 யோ 4:19)
அவரது அன்பை அதிகமதிகமாய்த் தியானித்துப், புரிந்து,
பாராட்டும்போது அதற்கேற்றாற்போல் நமது அன்பு வளரும்.

ஆ) அவர் ''யாது'' செய்கிறார் என்பதல்ல, அவர் ''யார்'' என்பதே நமது அன்புக்கு அடிப்படையாயிருக்கவேண்டும்!

''நன்மையோ தீமையோ''

(ரோ 8:35-39) ... *''மரணமோ ஜீவனோ ...''*

*இவையெல்லாவற்றிலும் முற்றும் **ஜெயம்!***

### *7. அது சிலுவை சுமத்தலின் வாழ்வு.*

யோ 21:18,19 ... *நீ விரும்பாத காரியங்கள் . . .*

*மரணம் ... என்னைப் பின்பற்றி வா ...*

- சிலுவை சுமந்து இயேசு மரித்தார்;
  நாமோ மரித்துச் சிலுவை சுமக்கிறோம்!

  அனுதினமும் சிலுவை சுமத்தல் —

  *''தன் சிலுவையைத் தினமும் எடுத்து ...''* (லூக் 9:22,23)

  — இன்றையச் சிலுவையற்ற கிறிஸ்தவம்

- மற்றவர்கள், மற்றவைகளால் திசை திரும்பாதீர்கள் —

  *''இவன் காரியம் என்ன? ... உனக்கென்ன?''* (யோ 21:22,23)

  *''நீ'' என்னைப் பின்பற்றிவா ... நான் வருமளவும் ...*

- இன்று சிலுவை — நாளை சிம்மாசனம்!

  *''அவருடன் பாடு ... அவருடன் ஆட்சி''* (2 தீமோ 2:8-12 அ)

  எ.கா.) சீடர்கள்— *''எனது பாடுகள்... ஒரு இராஜ்யம்... எனது பந்தி''* (லூக் 22:28-30)

### *முடிவுரை*

வெற்றி வாழ்வு எது? (Triumphant Life)

சிலுவைக்குப் பின்னர் கிறிஸ்து மொழிந்தவற்றிலிருந்து —

| | |
|---|---|
| 1. தெய்வீக உறவின் வாழ்வு | Divine Relationship |
| 2. விளங்கமுடியாத சமாதான வாழ்வு | Incomprehensible Peace |
| 3. அசைக்க முடியாத விசுவாச வாழ்வு | Unshakable Faith |
| 4. வேத வாக்கியங்களோடுள்ள வாழ்வு | Holy Scriptures |
| 5. தைரிய சாட்சியின் வாழ்வு | Bold Witnessing |
| 6. இணையற்ற அன்பின் வாழ்வு | Incomparable Love |
| 7. சிலுவை சுமத்தலின் வாழ்வு | Cross-bearing |